REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE : 55630

# நம் நாடு

தி.மு.க.தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: தை 22உ வெள்ளி (4—2—55) ★ ★ வெளியூர்: தை 23உ சனி (5—2—55) [இதழ் 200

## 'இலங்கை மயமாகும்' முட்டை!

தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வருகிற இந்தியர்கள், ஒரு கசப்பான போராட்டத்திற்குப் பிறகே பெறமுடிகிற இலங்கையர் என்ற அந்தஸ்தை, அவ்வப்போது இந்தியாவிலிருந்து இலங்கையில் இறக்குமதியாகிற முட்டைகள், கேட்காமலேயே பெற்றுவிடுகின்றனவாம்.

முட்டைகளில் 'இந்தியாவிலிருந்து வந்தவை,' என்றுள்ள இறக்குமதி முத்திரையை ஒரு விசேட சுத்திகரிப்பாளரைக் கொண்டு அழித்துவிடுவதன் மூலம், முட்டைகள், 'இலங்கையர் அந்தஸ்தை'ப் பெறுகின்றனவாம்!

"டைம்ஸ் ஆப் சிலோன்" என்ற இதழ் கூறுகிறபடி, 22 சென்ட்களுக்கு விற்கப்படுகிற இலங்கை முட்டைகளைக் காட்டிலும், இலங்கையில் இறக்குமதியாகிற இந்த முட்டைகள் 5 முதல் 8 சென்ட்கள் வரை மலிவாகக் கிடைக்கின்றனவாம!

# ம.சோ.கட்சி மந்திரி சபை முடிவிழா!

## பட்டம் தாணுவின் பதவி 'மாஜி'யாகும்!

### பிப்ரவரி-5 எனத் தேதி நிச்சயம்!

திருவனந்தபுரம். பிப். 2—

திரு-கோச்சியில் பட்டம் தாணுப்பிள்ளையின் தலைமையில் இயங்கும் சிறுபான்மை அங்கத்தினர் கொண்ட ம. சோ. கட்சி அரசாங்கத்தின் மீது இரண்டு நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்றும், அவற்றில் ஒன்று ஒரு சுயேச்சை உறுப்பினராலும் (முன்னாள் ம. சோ. கட்சி உறுப்பினர்) மற்றொன்று தி. த. நா. காங்கிரஸ் உறுப்பினராலும் தாக்கல் செய்யப்பட்டது என்றும் அதிகாரபூர்வமாக அறியக்கிடக்கிறது.

இத்தீர்மானங்களை சபை அனுமதித்தால், அவற்றில் ஒன்று உடனடியாக விவாதத்திற்கு வரக்கூடும்.

ஏற்கனவே திட்டமிட்டுள்ளபடி சபையின் இப்போதையக் கூட்டம் பிப்ரவரி 5-ந் தேதியுடன் முடிவடைகிறது.

மொத்தம் 117 பேர் உள்ள அந்த சட்ட சபையில் பட்டம் தாணு மந்திரி சபைக்கு எதிராக அவர் மீது நம்பிக்கை இல்லை என்று கூறும் தீர்மானத்திற்கு ஆதரவாக 60 வாக்குகள் கிடைக்கக் கூடும் என்று காங்கிரஸ்காரர்கள் கூறுகின்றனராம். 46 காங்கிரஸ், 12 தி. த நா. காங்கிரஸ், ஒரு சுயேச்சை, மற்றொரு கம்யூனிஸ்டு அனுதாபியான சுயேச்சை ஆக 60 வாக்குகள் என்று அவர்கள் கணக்கிட்டிருக்கிறார்களாம்.

தீர்மானம் சபைக் கூட்டத்தின் இறுதி நாளான பிப். 5-ந் தேதியன்று விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப் படலாமென அறிவிக்கப்படுகிறது. இதுவரை இந்தக் கூட்டத் தொடரில் பட்டம் தாணு இருமுறை பெரும் நெருக்கடிகளைச் சமாளித்திருக்கிறார் என்று கூறப்படுகிறது.

## திருடர்கள் மனம் மாற!

### கடவுளுக்கு வேண்டுதல்!

ராஜ்கோட், பிப். 3—

லீலாபூர் கிராமத்திலுள்ள 'தேவி பக்தர்' ஒருவர், திருடர்களின் மனதை மாற்றும் பொருட்டு உண்ணாவிரதத்தை மேற்கொண்டுள்ளார்.

திருடர்கள் ஊரெல்லாம் திருடுவதைக் காட்டிலும் 'தேவி' என்னும் சிலையின் நகைகளையும் திருடிவிட்டார்களாம். இப்படித் 'தகாத' முறையில் திருடும் திருடர்களின் மனம் மாற வேண்டுமென்று அந்த பக்தர் உண்ணாவிரதம் இருந்து வருகிறாராம்.

கிராம மக்கள் எவ்வளவோ கேட்டுக்கொண்டும், அவர் தனது உண்ணாவிரதத்தைக் கைவிட மறுக்கிறார்; அவர் மிகவும் பலவீனமாக இருக்கிறாராம்!

---

இந்தியாவில் கம்பளி ஆண்டுதோறும் 5 கோடி பவுண்டுக்குக் குறையாமலும் 5½ கோடி பவுண்டுக்கு மேற்போகாமலும் உற்பத்தியாகிறது.

## தனது மணத்துக்கே தடை கோரிய மணமகள்!

### பெற்றோர்களுக்கு எதிராகப் போர்க்கொடி!

### மணத்தை நிறுத்த மன்றக்கட்டளை

45 வயதுடைய மணமகன் பெற்ற ஏமாற்றம்

ஆமதாபாத், பிப். 4—

45 வயதுடைய மணமகன் ஒருவனை மணந்துகொள்ள விருப்பமில்லாத 13 வயது நிரம்பிய மணப்பெண், மணப் பந்தலிலிருந்து சமயம் வாய்த்ததும் யாருக்கும் தெரியாமல் வெளியேறி, தன்னை விடுவித்துக் கொண்டாள் என்று செய்தி ஒன்று வெளியாகி இருக்கிறது.

பெண்ணின் பெற்றோர் சம்மதத்தின் பேரிலேயே மேற்படி விவாகம் நடைபெற ஏற்பாடாகி இருந்ததென்றும், அந்த ஏற்பாட்டின்படி நடைபெறவிருந்த மணச்சடங்குகளுக்குச் சிறிது நேரத்திற்கு முன்னர்தான் அந்தப் பெண் யாருக்கும் தெரியாமல் வெளியேறி விட்டதாகவும், மணப் பெண்ணைக் காணாத மணமகனும் மற்றையோரும் திகிலுற்று, பலவிடங்களில் தேடி அலைந்தும் கண்டுபிடிக்க முடியாமற் போய்விட்டது என்றும் கூறப்படுகிறது.

மேற்படி மணப்பெண், அங்குள்ள மாதர் ஆசிரமமொன்றில் புகுந்து, அங்குள்ள ஆசிரமக் காரியதரிசியிடம் தன்னுடைய குறைகளைக் கூறி தன்னை விடுவிக்க அவர்களது உதவியைக் கோரியதாகவும், அவர்களுடைய உதவியைக் கொண்டு மணப் பெண், கோர்ட்டில், கிழவனுக்குத் தன்னை மணம் செய்துவைக்கக் கூடாது என்று தன் பெற்றோருக்கு உத்தரவிட வேண்டுமென்றும் மனுச் செய்து கொண்டிருக்கிறார்.

கோர்ட்டார், மனுவைப் பரிசீலித்து, உடனே, சாரதா சட்டப்படி இந்த விவாகம் நடைபெறக் கூடாது என்று பெற்றோருக்கும், கிழ மணமகனுக்கும் நோட்டீஸ் பிறப்பித்துவிட்டனர்; மணம் தடைப்பட்டது.

## குடியரசு நாடாக

### பாகிஸ்தான் விரும்புகிறதாம்!

லண்டன், பிப். 4—

தான் ஒரு குடியரசு நாடாக விரும்புவதாக காமன்வெல்த் நாடுகளிடம் பாகிஸ்தான் இன்று தெரிவிக்குமாம்.

குடியரசான பிறகும், பாகிஸ்தான், காமன்வெல்த்தில் உறுப்பினராக இருக்கும் என்று பிரதமர் முகமது அலி தெரிவிப்பாராம்.

## விடுதலை பெற்றனர்

திருவனந்தபுரம், பிப் 4—

மைசூர் மாநில நீதிமன்றத்தினால், இடைக்கால ஜாமீன் விடுதலை அனுமதி பெற்ற 7 திரு-கொ. சட்ட சபை உறுப்பினர்களும், நேற்றுமாலை, தக்கலை போலீஸ் 'லாக்கப்'பிலிருந்து விடுவிக்கப்பட்டனர் என்று தெரிய வருகிறது.

இந்த 7 உறுப்பினர்களும் இனிமேல் தற்போது நடைபெற்று வரும் திரு-கொ. சட்ட சபைக் கூட்டங்களில் கலந்து கொள்வார்கள் என்று கூறப்படுகிறது.

## சட்டசபையில் எங்கே உட்காருவது?

"ஒரு சட்டசபை உறுப்பினர் சபை நடந்து கொண்டிருக்கும் போது, அதிகாரிகளுக்கான காலரியில் அமரலாமா?"—என்ற கேள்விக்கு, திரு-கொச்சி சட்டசபை தலைவர் பட்டியலில் இடம் பெற்றிருக்கும் கே. சி. ஜியார்ஜ் பதிலளிக்கையில், "எந்த ஒரு அங்கத்தினரும் அங்கு நிரந்தரமாக உட்கார்ந்திருக்கக் கூடாது; சிறிது நேரம் வேலையிருந்தால் மட்டும் உட்கார்ந்திருக்கலாம்," என்று கூறியிருக்கிறார்.

### சிறு தானியங்கள் சாகுபடி

புதுடில்லி, பிப் 4—

நடப்பு ஆண்டில், சிறு தானியங்கள் சாகுபடி விஸ்தீரணம் 1,01,24,000 ஏக்கராவாக இருக்குமென்று தெரியவருகிறது.

## திருத்தத்தை திரும்பப் பெற்றதேன்?

### காரணத்தை அவர் அறியாராம்!

### திரு-கொச்சி கம்யூனிஸ்டுகளின் நடத்தைக்கு அஜாய் கோஷ் மழுப்பல்

சென்னை, பிப். 2—

திருவாங்கூர் தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர்களை விடுதலை செய்வது, அவர்கள் மீதுள்ள வழக்குகளை திரும்பப் பெறுவது, போலீசாரின் அடக்குமுறைகளினின்று மக்களைக் காப்பது, ஏராளமான விவசாயிகள் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுவதைத் தடுப்பது ஆகிய கோரிக்கைகளை உள்ளடக்கி, ராஜப் பிரமுகரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குக் கொண்டு வந்த திருத்தத்தினை, திரு-கொச்சி கம்யூனிஸ்டு கட்சி ஏன் திரும்பப் பெற்றுக்கொண்டது என்பதற்கான காரணங்களை விளக்குமாறு மத்தியக் கமிட்டி கேட்டுள்ளது என்று சென்னை வந்துள்ள அகில இந்திய கம்யூனிஸ்டு கட்சிப் பொதுச் செயலாளர் அஜாய் கோஷ் பத்திரிகையாளரிடம் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

பொதுவாகவே, கட்சியின் பொதுவான கொள்கையை ஸ்தல நிலைமைகளுக்குத் தகுந்தாற்போல் பயன்படுத்திக்கொள்ளும் சுதந்திரம் திரு-கொச்சி கம்யூனிஸ்டுகளுக்கு உண்டென்றாலும், திருத்தத்தை திரும்பப் பெறுவதற்கான காரணம் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை என்றும் அஜாய் கோஷ் குறிப்பிட்டிருக்கிறார்.

## இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்

பெரியநாய்க்கன்பாளையத்தில் விவாத அரங்கம்

கோயம்புத்தூர், பிப். 4—

மத்திய சர்க்காரின் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தையொட்டி தென்பிராந்தியப் பகுதிகளுக்காக பெரியநாய்க்கன்பாளையத்தில், இன்று தொடங்கி 3 நாட்கள் வரை நடக்கும் விவாத அரங்கை திட்டக் குழு துணைத்தலைவர் வி. டி. கிருஷ்ணமாச்சாரியார் ஆரம்பித்து வைத்தார்.

மத்திய சர்க்கார், திட்ட இலாகா அமைச்சர் குல்சாரிலால் நந்தா தலைமை தாங்கினர்.

சென்னை மாநிலத்தின் சார்பில், முதலமைச்சர் காமராசர், நிதியமைச்சர் சி. சுப்பிரமணியம், விவசாய அமைச்சர் எம். பக்தவத்சலம் மற்றும் சமுதாயத் திட்ட டைரக்டர் என். ஈ. எஸ். ராகவாச்சாரி, சி. ஆர். சீனிவாசன் ('சுமி.' ஆசிரியர்) ஆகியோர் மேற்படி அரங்கத்தில் கலந்து கொள்வார்களாம்.

## தோட்டத்தொழிலாளர்மீது துப்பாக்கிப் பிரயோகம்

### தோட்ட நிர்வாகிகளின் துடுக்குத்தனம்

திரு—கொ. சட்டசபையில் 'ஒத்திவைப்பு' தீர்மானம்

திருவனந்தபுரம், பிப். 3—

தென் திருவாங்கூரில் உள்ள விதுரா தோட்டத்தில், தோட்டத் தொழிலாளர்மீது 'வேண்டுமென்றே' நிர்வாகிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளதாகவும், அதன் பலனாக இரண்டு தொழிலாளர்கள் படுகாயமுற்றிருப்பதாகவும், அதனால் ஏற்பட்டுள்ள நெருக்கடியை ஆராய வேண்டிய அவசியத்தை வலியுறுத்த, தி. கொ. சட்டசபை கூட்டத்தை ஒத்திவைக்க வேண்டுமெனவும் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தை ம. சோ. கட்சி உறுப்பினரான மன்சுநாத் கொண்டுவந்தார்.

இத்திங்கள் முதல் தேதி அச்சம்பவம் நடைபெற்றதாக அறிவிக்கப்பட்டிருந்தது என முதல் மந்திரி அறிவித்தார். சம்பவத்தின் முழு விவரமும் தனக்குக் கிடைக்கவில்லை எனவும், விரைவில் கிடைத்துவிடும் எனவும், துப்பாக்கிப் பிரயோகத்திற்குச் சம்மந்தப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனரா இல்லையா என்பது தமக்குத் தெரியாது எனவும், மேற்படி சம்பவத்தில் தீவிரமான நடவடிக்கையை தாம் எடுத்துக் கொள்ளத் தயாராக இருப்பதாகவும், முதல் மந்திரி மேலும் குறிப்பிட்டார்.

முழு விவரமும் கிடைக்க வேண்டி இருப்பதால், தீர்மானத்தை நாளை வரையில் நிறுத்தி வைத்திருப்பதாக சபைத் தலைவர் தீர்ப்பளித்துள்ளார்.

# பெங்களூர் மாநாடுகள்—பிப். 12, 13

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை
சென்னை 4—2—1955 வெள்ளி

# ஏட்டுச்சுரைக்காய்தான்!

"ஏழை என்றும் அடிமை என்றும் எவரும் இல்லை சாதியில், இழிவு கொண்ட மனிதரென்பர் இந்தியாவில் இல்லையே!" என்ற நிலைமை, அன்னை பாரதமாதாவின் இளங் கரத்தில், வெள்ளை ஏகாதிபத்தியம் பூட்டியிருக்கும் அடிமை விலங்கு அறுத்தெறியப்பட்டதும்—பரத கண்டம் சுதந்திர பூமியானதும் உருவாகும் - உருவாக்கப்படும் என்று கனவுகண்டார்—"ஆயிரமுண்டிங்கு சாதி; எனின், அன்னியர் வந்து புகல் என்ன நீதி?" - என்று வெள்ளையரைச் சாடிய கவிஞர் சுப்ரமணிய பாரதியார்!

ஆனால் இந்தியத் துணைக் கண்டத்தினின்றும் வெள்ளையர் வெளியேறி, ஆண்டுகள் ஏழு உருண்டோடிவிட்டன.

'ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று' ஆடியாயிற்று!

'கனவு பலித்ததம்மா, கவி பாரதி கண்ட கனவு பலித்ததம்மா' என்று பள்ளுப்பாடியாயிற்று.

மக்களால், மக்களுக்காக, மக்களுடைய ஜனநாயகக் குடியரசு நிறுவப்பட்டுவிட்டது!

இதோ! எல்லா மக்களுக்கும், எல்லா உரிமைகளும் வழங்கும் உரிமைச் சாசனம்—அரசியல் சட்டம் உருவாகிவிட்டது; இனி சாதியால் உயர்ந்தவர் - தாழ்ந்தவர், தீண்டப்படுவோர் - தீண்டப்படாதோர் என்று பேதப்படுத்துவது சட்டப்படி குற்றமாகும்; எல்லோரும் சம உரிமை பெற்ற மக்களாகவே நடத்தப்படுவர்—என்று கூறப்பட்டது.

உண்மைதான்; இந்திய அரசியல் சட்டம், 'மனிதர்களில் சாதிப்பாகுபாடு காட்டக்கூடாது,' என்று கூறுகிறது.

ஆனால், 'ஆயிரமுண்டிங்கு சாதி' எனும் அநியாய நிலை அழிந்து, 'இழிவு கொண்ட மனிதரென்பர் இந்தியாவில் இல்லை' எனும் நிலை உருவாயிற்றா? பாரதியின் கனவு பலித்ததா? "சாதியிருக்கிறதென்பானும் இருக்கிறானே!" என்று புரட்சிக் கவி பாரதிதாசன் பாடுகிற நிலை தானே இன்றும் நிலவுகிறது? நாட்டில் மக்களிடையே சாதிய எண்ணங்களும், உயர்ந்தவன் என்ற இறுமாப்பும், தாழ்ந்தவன் என்ற இழிமொழியும் இல்லாமல் போய்விட்டனவா என்றால்; 'இல்லை' என்று நாம் மட்டுமல்ல—நாட்டை ஆளும் நல்லவர்களேகூட ஒப்புக் கொள்கிறார்களே!

மக்களிடையே சாதிப் பாகுபாடும், தாழ்த்தப்பட்டவன் - இழிகுலத்தவன் என்ற எண்ணமும், அந்த எண்ணங் கொண்ட உயர் வகுப்பார் என்று தங்களைக் கூறிக்கொள்பவர்களால் தாழ்த்தப்பட்டுக் கிடக்கும் மக்கள் அனுபவிக்கும் தொல்லைகளும் அறவே நீங்க, சட்டங்கள் செய்துவிட்டால் மட்டும் போதாது என்பதை நாம், இதற்கு முன் அவ்வப்போது எடுத்துக் காட்டி இடித்துரைத்திருக்கிறோம்.

மீண்டும் மீண்டும் அது பற்றி எடுத்தியம்ப வேண்டிய நிலையில், நாட்டில் நடைபெறும் நிகழ்ச்சிகள் நம்மைக் கொண்டு வந்து நிறுத்துகின்றன.

"சிந்து என்ற ஒரு சிறுவன் இந்து கோவில் ஒன்றுக்குச் சென்று, நோய்வாய்ப்பட்டு மீண்ட தன் அன்னைக்காக ஒரு தேங்காய் காணிக்கை தரச் சென்றபோது கோவில் பூசாரி அந்தப் பையனை கோவிலை விட்டுத் துரத்தினார். பையன் மாவட்ட அதிகாரியிடம் இதுபற்றி புகார் செய்யவே, மாவட்ட அதிகாரி அந்த இந்துக் கோவில் பூசாரிமீது நடவடிக்கை மேற்கொண்டார். பம்பாய் உயர் நீதி மன்றம் பூசாரிக்கு 50 ரூபாய் அபராதம் விதித்துள்ளது."

என்று ஒரு செய்தி வெளிவந்துள்ளது.

மிகச் சிறிய சம்பவம்தான்; ஆனால், இந்த நிகழ்ச்சி, நாட்டு மக்களிடையே—குறிப்பாக இந்து மதத்தவர்களிடையே சாதீய எண்ணம், உயர்ந்தவன்—தாழ்ந்தவன் என்று பாகுபாடு செய்யும் எண்ணம் எந்த அளவு நிலைபெற்றிருக்கிறது என்பதைக் காட்டவில்லையா என்ன?

'நோயிலிருந்து தனது அன்னை மீண்டது, ஆண்டவனின் அருளால்தான்,' என்று எண்ணி, அச்சிறுவன், கோவிலுக்குத் தேங்காய் எடுத்துக் கொண்டு சென்றதே இந்த உபகண்டத்து மக்கள் பெற்றிருக்கும் பகுத்தறிவின் சராசரி அளவைக் காட்டுகிறது.

"நீர்க் குமிழி வாழ்வு; நிலையற்றது இந்த உலகம்; இங்கு பெறும் இன்பம் எல்லாம் மாயம்; எனவே, நிரந்தரமான இன்ப உலகம் செல்ல, துன்பம் நிறைந்த இந்தப் பிறவிப் பெருங்கடல் நீந்த, துறந்துவிடு இவ்வுலக எண்ணத்தை—மறந்துவிடு மாய வாழ்வை," என்ற வஞ்சக வேதாந்தத்தை நம்பி, அறிவிழந்து—தான்படும் இன்னலும் அல்லலும் 'அவன் செயல்', 'விதிப்பயன்', 'பூர்வ ஜென்ம பாபம்'-என்றெண்ணி தனது வாழ்வில் நிலவும் துன்பம் விலக தன்னைப் பிடிக்கும் பிணி அகல, இன்னும் என்னவெல்லாம் வேண்டுமோ அவையெல்லாம் பெற 'அவனை' வழிபடுவதே வழி என்ற நம்பிக்கை கொண்டவர்களாய் விளங்குகிறார்கள் மக்கள்.

"இந்த நிலைமை மாற வேண்டும்; 'வாழத்தான் பிறந்தோம்', என்ற எண்ணமும், அந்த வாழ்வில் பற்றும், வாழ்வு கிடைக்காவிட்டால் வாழ முடியாதவர்களாக ஆக்கப்பட்டிருப்பதற்குக் காரணங்கள் இவை இவை என்று தீர்மானிக்கும் அறிவும், வாழ்வு, வளம், உரிமை ஆகியவற்றைப் பறிக்க எவரையும், எதையும் அனுமதியோம் என்ற உறுதியும் பெற்றவர்களாக மக்கள் இருக்க வேண்டும்," என்பதுதான் தி. மு. கழகத்தின் சமுக சீர்திருத்தப் பணியின் அடிப்படை.

அதன்படி, தனது தாய், நோய்வாய்ப்பட்டதும், பின்னர் திரும்பவும் நலம் பெற்றதும் 'அவனருளால்' என்றெண்ணி அந்தச் சிறுவன், கோவிலுக்குக் 'காணிக்கை' செலுத்தச் சென்றதே கண்டனத்துக்குரியதாகும்.

ஆனால் பொதுவாக, பல கலையும் பயின்று, பட்டமும் பெற்று, உயர்பதவியும் வகிக்கும் மேதாவிகள்கூட 'அவன் அருள்,' 'மத நம்பிக்கை' என்ற தொத்து நோய்களினின்றும் விடுதலை பெற விழையவில்லை என்ற நிலை இருக்கும்போது, நூற்றாண்டு காலமாய் வாழ்வின் அடித்தளத்திலே அழுத்தப்பட்டு, அடிமைகளாய் ஆக்கப்பட்டு, அறிவு வாடையே வீச முடியாத நிலையிலிருந்த தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த அந்தச் சிறுவனுக்குக் 'காணிக்கை' செலுத்த வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டதில் நமக்கு ஆச்சரியம் ஏதும் இல்லை.

அந்தச் சிறுவன் கோவிலுக்குள் சென்றதைக் கண்ட கோவில் பூசாரிக்குக் கோபம் வந்து, அவனைத் துரத்தியடிக்கும் அளவிற்கு எண்ணம் உதயமாயிற்றே, அதைத்தான் இங்கு எடுத்துக்காட்ட விரும்புகிறோம்.

சிறுவன் கோவிலிலிருந்து பூசாரியால் துரத்தியடிக்கப் பட்டதற்குக் காரணம், அவன் ஒரு 'அரிசன்' என்றழைக்கப்படும் தாழ்ந்த குலத்தவன் என்பதால்தானே?

'ஆலயம் அரிசனங்களுக்குத் திறந்துவிடப்பட்டாயிற்று!' என்று சொன்னார்கள்; 'ஆண்டவன் சன்னதியில் உயர்ந்தவன் — தாழ்ந்தவன் என்ற பாகுபாடு இருப்பதே கூடாது' என்று புது 'மதோபாக்கியானங்கள்' செய்தார்கள்; தாழ்ந்தவன் என்று கூறி எங்கேனும் ஒருவன் அனுமதி மறுக்கப்படுவது சட்டவிரோதமான தண்டனைக்குரிய குற்றமாகும் என்று குறிப்பிட்டார்கள்; என்றாலும், 'தாழ்த்தப்பட்டவர்களுக்கு உணவு தர மறுத்த 'காபி ஓட்டல்'காரருக்கு தண்டனை—பொதுக்கிணற்றில் 'அரிசன' வகுப்பைச் சேர்ந்தபெண் தண்ணீர் இறைத்தமைக்காக, சாதி இந்துக்கள் அவளைக் கொடுமைப்படுத்தினர் - கோவிலில் காணிக்கை செலுத்தச் சென்ற அரிசன வகுப்புச் சிறுவனை துரத்திய பூசாரிக்கு தண்டனை - என்பனபோன்று செய்திகள் வந்தவண்ணம்தான் உள்ளன; அது, நின்றபாடில்லை.

நாம் அடிக்கடி கூறுவது போல, இந்தக் கொடுமைகள், இந்து மதத்தில்தான் மலிந்து காணக்கிடக்கின்றன என்பதும் இந்தக் கொடுமைகளை மனமார செய்யுமாறு பிறரைத் தூண்டுவதற்கு இந்து மதத்தின் அடிப்படையேதான் காரணம் என்பதும், உலகத்திலேயே வேறெந்த மதமும் பயக்காத தீமைகளைப் பயப்பது இந்து மதந்தான் என்பதும், இக்கொடுமைகள் அகல வேண்டும் என்று விழைவோர் புரிந்து கொள்ள வேண்டிய உண்மையாகும்.

"நீ நிறத்தால் கறுப்பன் - நீக்ரோவன்; நான் நிறத்தால் வெள்ளையன் - ஆங்கிலேயன்; எனவே, நீ வேறு - நான்வேறு; நீ தாழ்ந்தவன் - நான் உயர்ந்தவன்; நீ, நான் உணவு உண்ணும் இடத்தில் நுழையக் கூடாது; என்னுடைய தெருவில் நீ வசிக்கக்கூடாது; என் பிள்ளைகளுடன் உன் பிள்ளைகள் படிக்கக்கூடாது; நீ அடிமையாயிருக்க வேண்டியவன்; நான் ஆளப்பிறந்தவன்," என்றுகூறி, மக்களை அடக்கி ஒடுக்கி, அட்டகாசம் புரியும் ஆப்பிரிக்க நாட்டு மலான்களுக்கும், இந்து மதத்தைப் போற்றி வளர்ப்பவர்களுக்கும் என்ன வித்தியாசமிருக்க முடியும்?

எனவே, மனிதர்களிடையே சாதிகளைப் புகுத்தி, அதில் ஒரு பிரிவினரைத் தாழ்த்தப்பட்டவர்கள் என்று கூறி, அவர்களைக் கொடுமைகள் பலவற்றிற்கு ஆளாக்குகிற அவல நிலையின் மூலகாரணங்கள் களைந்தெறியப்பட்டு அறியாமையில் உழலும் மக்களின் உள்ளம் பகுத்தறிவு ஒளியால் துலங்கப் படுவதற்கான சீர்திருத்த வேலைகள் செய்யப்பட்டாலன்றி, இந்தக் கொடுமைகள் குறையமாட்டா!

வெறும் சட்டங்கள், இந்த மகத்தான மாறுதலைச் சாதிக்கும் தன்மையன என்று நாம் எண்ணவில்லை; அவை, வெறும் ஏட்டுச் சுரைக்காய்தான்!

# வாழும் முறையும், ஒழுங்கும் வகுத்தவர் நாம்!

## முன்னோரின் பண்பும் நெறியும் அறிய இலக்கியங்களே பயன்படும்

*காரைக்குடி அழகப்பா கல்லூரியில் 'வாழும் நெறி' குறித்து இரா. நெடுஞ்செழியன் சிறப்புரை*

"மனிதன் வாழ வேண்டுமானால், அவன் வாழும் முறைக்கு—வாழும் நெறிக்கு ஒழுங்கு வேண்டும்; ஒழுக்கமே உயிரினும் சிறந்தது; நுணுகி ஆராயும் தன்மையைக்கொண்டு ஒரு செயலில் இறங்கும்பொழுது அதைக் கிண்டிக் கிளறி ஆராய்ந்து அறிந்து இறங்குவதுடன், நாட்டிற்கு நாடு—வீட்டிற்கு வீடு—காலத்திற்குக் காலம்—சூழ்நிலைக்கேற்ப, அச்செயலை ஒழுங்குபடுத்தி கொடுமைகளைப் போக்கி, துன்பத்தை நீக்கி, சிலபல வரைமுறைகளை உண்டாக்கி வாழும் நெறியை வகுத்திருக்கிறார்கள், நம் முன்னோர்கள்; எல்லா பெண்களும்—எல்லா ஆண்களுடனும் சேர்வது ஒழுக்கமல்ல என்பதை முதலில் கண்டறிந்து, அதை ஒழுங்குபடுத்திக் கொண்டு, இறப்பின் இறுதிவரையில்—வாழ்க்கை முழுதும் ஒருவருடனேயே இணைந்து வாழ்வதே—ஒருவர் ஒருத்தியுமே சேர்ந்து வாழ்வதே—வாழ முனைவதே ஒழுக்கம்—அதுவே வாழும் நெறியாகும் என்பதை ஒழுங்குபடுத்தி வைத்திருக்கிறார்கள்—ஆன்றோர்கள்; ஒரு கூட்டம் என்றால், அந்தக் கூட்டத்தின் தலைவர் சொல்லுக்கு நாம் அடங்கி நடக்கும் தன்மை, அதை வகுத்துக் கொண்ட முறை—இவைதான் ஒழுக்கமாகும்; அவைதான் வாழும் நெறியாக அமைகின்றன; இந்த நல்லொழுக்கங்களை சங்க இலக்கியங்களிலே சான்றுடன் காணலாம்."

"ஒரு நாட்டின் புகழுக்கு, அங்கே கிடைக்கும் கல்வெட்டுக்களைவிட, கூடகோபுர மாடமாளிகைகளைவிட, புராதன நாகரிகச் சின்னங்களைவிட, தோண்டியெடுக்கப்பட்ட பழங்கால புதை பொருட்களைவிட, செப்புப் பட்டயங்களைவிட மிகச் சிறந்த கருவி—மிகச் சிறந்த சாசனம் அந்நாட்டின் பெருமையைக் கூறும் இலக்கியங்களேதான்; வரலாறுகள், வரலாற்றுகளைக் கூறி வாழ்ந்த விதத்தை விளக்குமே தவிர, இலக்கியங்களைப் போல், அந்நாட்டு மக்களின் வாழும் நெறியை—அவர்கள் கடைப்பிடித்த நல்லொழுக்க நெறியை—அவர்களுக்கே உரித்தான பண்பாட்டு நெறியை விளக்க முடியாது; எனவேதான், இலக்கியங்கள், ஒவ்வொரு நாட்டிலும் வாழும் நெறிக்கு மிகப் பயன் படக்கூடியவைகளாக இருக்கின்றன."

"இலக்கியங்களைத் துணைகொண்டு ஆராய்ந்தறிந்து, இன்றைய சீர்கேடுகள் என்ன—இவைகளைப் போக்குவதெப்படி—இறந்தகாலத் தவறுகள் என்ன—பண்டை நாட்களிலே நாம் வாழ்ந்ததெப்படி—இற்றைநாளில் நமது நிலை என்ன—வளர்ந்தோமா, குறைந்தோமா என்பதைச் சிந்தித்து, இன்றைய நாகரிகத்தின் உச்சியிலே—பண்பாடுகளின் வளர்ச்சியிலே வாழும் நெறியை அமைத்துக்கொள்வதுதான் மனித இனத்தின் முக்கிய நோக்கமாகும்."

*—இவ்வாறு, தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், 23—1—55 மாலை, காரைக்குடி அழகப்பா கல்லூரியில் நடைபெற்ற தமிழ் விழாவில் 'வாழும் நெறி' எனும் தலைப்பில் சிறப்புரை ஆற்றுகையில் குறிப்பிட்டார்.*

அவர் மேலும் தொடர்ந்து பேசினார்:—

"இத்தகைய 'வாழும் நெறி'யுடன், இலக்கிய உலகிலேயே மிகச்சிறந்து விளங்குகிற நாம்—யாரும் அடைய முடியாத அரியபெரிய இலக்கியங்களைக் கொண்டு பண்பாடுகளிலே விண் உயர் புகழ் பெற்றிருக்கின்ற நாம், நமது கடந்த காலத்தை நினைத்துப் பார்த்தால், அக்காலத்தில் ஏற்பட்ட சிலபல தவறுகளை — குணக்கேடர்களால் ஏற்பட்ட குறைபாடுகளைக் காண முடியும். 'களை' எடுப்பதுபோல் அவற்றைக் களைந்தெறிந்துவிட்டு, நிகழ்காலத்திற்கேற்ப நிகழ்வதைச் சிந்தித்து, சீர்திருத்தி, நமது வருங்காலத்தைச் செழிப்புடையதாக்கி பயன் பெற வேண்டும்.

"மிருகங்களுக்குத் தம் 'வாழ்வு நெறி'யைப் பற்றிக் கவலையெடுத்துக்கொள்ள 'பகுத்தறிவு' இல்லை என்று நாம் கூறினாலும், அவைகளுக்கு உண்மையிலேயே பகுத்தறிவு என்பதில், 100-ல் 5 பங்கோ, 6 பங்கோ இருக்கத்தான் செய்கிறது. சாதாரணமாக ஒரு மிருகத்தை உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால், அது, தனக்கு வேண்டிய உணவு, ஓய்வெடுக்க இடம் ஆகியவற்றைத் தேடித்தான் அலைகிறது. ஒரு வீட்டில் நாய் ஒன்று வளர்க்கப்பட்டால், அது, அவ்வீட்டுக்கு வருகின்ற அன்னியரை—அதற்குப் பழக்கப்படாத மாற்றாரைக் கண்டதும் குரைக்கிறது. எந்த அறிவைக் கொண்டு—பாகுபடுத்தும் திறனைக் கொண்டு—அது இப்படி நடந்துகொள்ளுகிறது? எனவே, அதற்-

(4-ம் பக்கம் பார்க்க)

# தொழிற் சங்கங்கள் அரசியலில் ஈடுபடுவதால் அச்சமேன்?

## வாக்குரிமை வழங்கியதின் நோக்கம்தான் என்ன?

## மலேயா உள்நாட்டு அமைச்சரின் கருத்து

"அரசியல் நடவடிக்கைகளில் தொழிற்சங்கங்கள் ஈடுபடுவதைக் கண்டு அச்சம் கொள்வதற்கான அவசியம் என்ன என்பதை என்னால் அறிய முடியவில்லை. தொழிற்சங்க உறுப்பினர்களுக்கு வாக்குரிமை வழங்கி இருக்கிறோம். அதன் விளைவாக, தங்களுடைய நலன்களை சட்டசபைகளில் பாதுகாக்க உறுதி கொண்டிருக்கும் மற்ற அரசியல் கட்சிகளுக்கு நிதி உதவவும், தங்களுடைய சொந்த அரசியல் கட்சிக்கு வாக்களிக்கவும், நிச்சயமாக அவர்களுக்கு உரிமை உண்டு."

—இவ்வாறு, மலேயா அரசாங்கத்தில் விலக இருக்கும் உள்நாட்டுத் துறை உறுப்பினரான சர். டாடோ ஒன்பின் ஜாபர், கருத்தறிவித்துள்ளார்.

தொழிற்சங்கங்கள், சொந்தத்தில், 'அரசியல் நிதி' திரட்டலாமா கூடாதா என்ற பிரச்சினை, மலேயா சட்டசபையில் விவாதிக்கப்பட்டது. விவாத முடிவில், 'அரசியல் நிதி' திரட்ட. தொழிற்சங்கங்களுக்கு உரிமை உண்டு எனத் தொழிற்சங்க அவசர சட்டம் திருத்தப்பட்டது.

அவ்விவாதத்தின்போது, மேற்குறிப்பிட்டுள்ளவாறு, தொழிற்சங்கங்களின் 'அரசியல் நிதி' திரட்டும் உரிமையை வலியுறுத்திப் பேசிய உள்நாட்டுத் துறை உறுப்பினர் மேலும் தொடர்ந்து கூறியதாவது:—

"அரசியல் கட்சிகளுக்கு தொழிற்சங்கங்கள் நிதி உதவி அளிப்பது என்பது காலம் வராத ஒன்றாகும் என, மூன்று ஆண்டுகளுக்கு முன், பொறுப்பு வாய்ந்த மலேயா தொழிற் சங்கக் குழு கருதிற்று. ஆனால் இன்றோ, தொழிற்சங்கங்கள் வளர்ந்திருப்பதையும், அரசியல் நிலைமைகள் மாற்றம் பெற்றிருப்பதையும் தொழிற் சங்கத் தலைவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். அரசியல் கட்சிகளின் வளர்ச்சியும், வலிமை மிக்க இணக்கமும், தாங்களும் அரசியலில் பங்கு கொள்வதற்கான காலம் வந்து விட்டது எனத் தொழிற்சங்கத் தலைவர்கள் கருதுகின்றனர்."

தொழிற் சங்க அவசர சட்டத்தில் செய்யப்பட்டுள்ள திருத்தத்தின் காரணமாக, மலேயாவில் இருக்கும் 2 லட்சம் உறுப்பினர்களைக் கொண்ட தொழிற்சங்கம், இனி தனது உறுப்பினர்களிடமிருந்து 'அரசியல் நிதி' திரட்டும் உரிமையைப் பெறுகிறது.

## டல்லஸ் பர்மா வருகை

### மக்களின் எதிர்ப்பு

ரங்கூன், பிப். 2—

பாங்காங்கில் நடைபெறும் மாநாட்டில் கலந்துகொண்ட பின்னர் அமெரிக்க இராஜாங்க அமைச்சர் டல்லஸ் பர்மாவுக்கு வருவதாக இருக்கிறார்.

டல்லசின் வருகையை பர்மாவின் மூன்று பிரதான எதிர்க் கட்சிகள் எதிர்க்கின்றன.

இந்த எதிர்ப்புக்கு முன்னாள் பர்மிய முதல் அமைச்சர் பாமா தலைமை வகிக்கிறார்.

"ஆசியாவில் இப்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியை ஆரம்பித்து வைத்தது டல்லஸ்தான்; டல்லசின் பர்மா வருகை, பர்மா அல்லது ஆசியா, அல்லது உலக சமாதானத்திற்கு ஏற்ற நிகழ்ச்சியாக இருக்காது; அது மட்டுமின்றி, டல்லசை பர்மாவுக்கு வருமாறு பர்மிய மக்கள் அழைக்கவில்லை,"

என்று, எதிர்ப்பாளர்கள் தாங்கள் விடுத்திருக்கும் அறிக்கை ஒன்றில் கூறுகின்றனர்.

## கல்வி பயிலும் நேரம் குறைகிறது

பம்பாய் மாநிலத்திலுள்ள பள்ளிகளில் 5-வது வகுப்பு முதல் 7-வது வகுப்பு வரை உள்ள கல்வி பயிலுவதற்கான நேரத்தைக் குறைக்க வேண்டுமென்று பம்பாய் சர்க்கார் முடிவு செய்திருக்கிறது. இம்முடிவின்படி, இனிமேல் அவ்வகுப்புக்களில் வாரமொன்றுக்கு 26 முதல் 28 மணி நேரம் பாடம் போதிக்கப்படுமென்றும், ஒரு 'பீரியடி'ன் நேரம் 35 முதல் 40 நிமிடங்களாக இருக்குமென்றும் கூறப்படுகிறது.

## பெரியாறு மின்சாரத் திட்டம்

சென்னை, பிப். 2—

மதுரை மாவட்டத்தில் ஏற்படுத்தப்படவிருக்கும் பெரியாறு ஜலதார மின்சாரத் திட்டத்தை பிப்ரவரி 11-ந் தேதியன்று முதன் மந்திரி காமராசர் ஆரம்பித்து வைப்பார் எனத் தெரிகிறது. தேனியிலிருந்து 34 மைல் தொலைவில் திட்டம் துவக்கப்படுகிறது.

திட்டத்திற்கு ஆரம்பத்தில் 5·75 கோடி செலவாகுமென்றும் திட்டம் முடிவடைகிற பத்தாண்டு காலத்தில் சுமார் பத்தரை கோடி செலவாகலாமென்றும் தெரிகிறது. திட்டம் முடிய 10 ஆண்டுகளுக்கு மேலாகுமாம்.

சென்னை அரசாங்கத்தின் வற்புறுத்தலின் பேரில் மத்திய அரசாங்கம் இத்திட்டத்தை முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலேயே சேர்த்துள்ளதாம்.

பெரியாறு நீரை மின்சார சக்தி உற்பத்தி செய்வதற்கு உபயோகப்படுத்துவது பற்றி திரு-கொச்சி சர்க்காருக்கும் சென்னை சர்க்காருக்கும் இடையே இருந்துவந்த தகராறுகள் தீர்ந்து ஒரு உடன்பாடு ஏற்பட்டுவிட்ட பிறகே, திட்டம் துவக்கப்படுகிறது.

இந்தத் திட்டத்தினால் ஆரம்பத்தில் பொதுவாக 75,000 கிலோவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் என்று தெரிகிறது.

## 75 லட்சம் பூட்டுகள் உற்பத்தியாம்!

அலிகாரில் ஆண்டொன்றுக்கு சுமார் 75 லட்சம் பூட்டுகள் உற்பத்தி செய்யப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தியாவில் உள்ள பூட்டுத் தொழில் நகரங்களிலெல்லாம் அலிகார்தான் பெரியதாகும். இத்தொழிலில் 32,000 பேர் ஈடுபட்டிருக்கின்றனர். இங்கு உற்பத்தி செய்யப்படுகின்ற பூட்டுகள் சீனா, பர்மா, இலங்கை, ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா — மற்றும் பல நாடுகளுக்கும் அனுப்பப்படுகின்றன.

## தொழிலாளர் நல அரசியலார் இன்சூரன்ஸ் திட்டம்

சென்னையில் அமுல் நடத்தப்படும்

சென்னை நகரிலும், அதை அடுத்துள்ள பிரதேசங்களிலும், சீக்கிரமே தொழிலாளர் நல அரசியலார் இன்சூரன்ஸ் திட்டம் அமுல் நடத்தப்படும் என்று சென்னை அமைச்சர் பக்தவத்சலம் கூறினார். இத்திட்டத்தை அமுல் நடத்த வேண்டிய ஆரம்ப ஏற்பாடுகள் சீக்கிரமே துவங்கும் என்றும் அவர் கூறினார்.

## சென்னை மாநிலத்தில் உள்ள குருடர்கள்

சென்னை, பிப். 2—

சென்னை மாநிலத்தில் சமூக, பொருளாதாரத் துறைகளில் 50,000 குருடர்களைக் குடியமைக்க வேண்டியிருக்கிறதென்றும், ஆனால் மொத்தம் இந்த மாநிலத்தில், 1,60,000 பேர் இருக்கலாம் என்றும் பூந்தமல்லி குருடர் பள்ளித் தலைமை ஆசிரியர் பி. ஒ நந்தகோபால் சென்னை ரோட்டரி சங்க சார்பில் தனக்கு கன்னிமரா ஹோட்டலில் தரப்பட்ட விருந்துக் கூட்டத்தின்போது குறிப்பிட்டிருக்கிறார்.

# 'மனிதரின் எண்ணங்களை மாற்ற அரசியல் நடவடிக்கைகளால் முடியாது'

## ஜெயப்பிரகாஷ் நாராயணன் கருத்து

"உலக முழுதும் மதிப்பிடப்படும் அடிப்படையைக் கொண்ட சமுதாயத்தை உருவாக்க வேண்டும் எனும் எண்ணத்துடன் மனிதனையும், மனிதனின் எண்ணங்களையும் மாற்றுவதற்கு எந்த ஒரு அரசியல் நடவடிக்கையும் எப்படிப் பயன்பட முடியும் என்று எனக்குத் தெரியவில்லை," என்று திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணன் கூறியிருக்கிறாராம்.

"ஒரு அரசியல் கட்சி அதிகாரம் பெற்று, பெற்ற அதிகாரத்தைக் கொண்டு மக்களின் வாழ்க்கையில் சிலபல மாற்றங்களை உண்டு பண்ண முடியும். வெளி நிறுவனமாயிருக்கிற அந்த கட்சிகள், மக்களை மாற்றிவிட முடியாது.

"பலாத்காரம், பயமுறுத்தல், சட்டம், நிர்வாக நடவடிக்கைகள் இவைகள் எல்லாம், மக்களை மாற்றிவிட முடியாது,"

என்றும், திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணன், கூட்டமொன்றில், ஆச்சாரியா வினோபா பாவேயின் பூதான வாழ்வுத் தத்துவம் பற்றி விளக்கிப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தியாவில், 1954 — 55-ம் ஆண்டில் சுமார் 63 கோடியே 90 லட்சம் பவுண்டு தேயிலை விளைந்திருக்குமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

# சாதி வேற்றுமை காட்டிய கோவில் பூசாரி

## ரூ. 50 அபராதம் விதிக்கப்பட்டார்

### அரிசனச் சிறுவனை கோவிலிலிருந்து துரத்தினாராம்!

அரிசனச் சிறுவன் ஒருவன், கோவில் ஒன்றுக்குச் சென்று, தனது தாயார் உடல் நலம்பெற்றதை ஒட்டி, தேங்காய் உடைக்கச் சென்றபோது, பூசாரி அந்தச் சிறுவனை வெளியே விரட்டிய குற்றத்திற்காக பம்பாய் உயர் நீதிமன்றம், பூசாரிக்கு ரூ. 50 தண்டனை விதித்துள்ளது என்ற செய்தி வெளியாகியுள்ளது.

சிந்து என்ற அரிசனப் பையன், நோய்வாய்ப்பட்டிருந்த தன் தாய் உடல் நலம் பெற்றதினால் தேங்காய் உடைக்க கோவிலுக்குள் சென்றபோது பூசாரி தன்னை விரட்டியதாக, கொலாபா கலெக்டருக்கு அவன் புகார் அனுப்பினான். பூசாரி கைது செய்யப்பட்டு, வழக்கு நடந்தபோது குற்றம் ருசுவாகவில்லை என்பதற்காக கீழ்க் கோர்ட்டில் விடுவிக்கப்பட்டாராம்; ஆனால் அரசாங்கம், உயர் நீதிமன்றத்திற்கு அப்பீல் செய்து பூசாரிக்கு தண்டனை வாங்கித்தந்துள்ளது

## போலந்து கம்யூனிஸ்டு அதிகாரிகள் விசாரிக்கப்படுவர்

போலந்தின் பாதுகாப்பு மந்திரி சபையைச் சேர்ந்த முக்கியமான மூவர் வேலையிலிருந்து நீக்கப்பட்டு, தங்களிடமிருந்த அதிகாரத்தை தவறான வழியில் உபயோகித்ததாகக் குற்றஞ்சாட்டப்படவிருப்பதாக கம்யூனிஸ்டு கட்சி இதழ் ஒன்று கூறுகிறது.

புலன் விசாரணை இலாகா மந்திரி சபை அலுவலக டைரக்டரான ஜே. ரோஜான்ஸ்கி, கூடாதென ஒதுக்கப்பட்ட முறைகளை புலன் கண்டுபிடிப்பதில் உபயோகித்ததாயும், தனது அதிகாரத்தைத் தவறாக உபயோகித்ததாயும் குற்றம் சாட்டப்படவிருக்கிறாராம்.

இன்னும் அனதால் பெஜின், பாம்கோவ்ஸ்கி, என்ற இருவரும் கூட கம்யூனிஸ்டு கட்சியிலிருந்து விலக்கப்பட்டுவிட்டதாகவும் அந்த இதழ் தெரிவித்துள்ளதாம்.

# ஆதிவாசிகள் மீது போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம்

## 9 பேர் பலி; 25 பேர் கைது

## நிலப்பிரபுவின் வீட்டைத் தாக்கினராம்!

கடந்த டிசம்பர் 26-ந் தேதியன்று வலாடு எனும் கிராமத்தில், சுமார் 1,200 ஆதிவாசிகள் சட்ட விரோதமாகக்கூடி அந்தக் கிராமத்தின் நிலப்பிரபு ஒருவரின் வீட்டைத் தாக்கி கொள்ளையிடுகையில் போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்து கூட்டத்தைக் கலைத்தனராம்.

துப்பாக்கிப் பிரயோகத்தின் விளைவாக ஒன்பது பேர் கொல்லப்பட்டனர் என்று தெரியவருகிறது.

அதையொட்டி 25 பேர்கள் கைது செய்யப்பட்டு, சட்டவிரோதமாகக்கூடி கொள்ளையிடல், வீட்டை உடைத்தல், பயங்கர ஆயுதங்களை வைத்திருத்தல், இதருக்கு படுகாயமுண்டாக்குதல் போன்ற வழக்குகள் அவர்கள் மீது தொடரப்பட்டுள்ளதாயும் கூறப்படுகிறது.

பீகார் மாநிலத்தில், போக்குவரத்து நெருக்கடியை தவிர்ப்பதற்காக, முக்கியமாகக் கட்டப்பட்டு வரும் கங்காநதி பால நிர்மாணத் திட்டத்துக்கு மொத்தம் 16 கோடி ரூபாய் செலவாகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

# ஆசிரியர்கள் யார்-மாணவர்கள் யார் என்று அறிய முடியவில்லையே!

## அறியக்கூடிய வகையில் ஆசிரியர்கள் உடை அணிய வேண்டும்

"இப்போதுள்ள பள்ளிக்கூடங்களில் மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் ஆசிரியர்களுக்கும், பயிற்சி பெறும் மாணவர்களுக்கும் வித்தியாசமே கண்டுபிடிக்க முடியவில்லை. எனவே, ஆசிரியர்கள், பண்டைக்கால முறைப்படி, நல்ல உடை, தலைப்பாகை இவைகளை அணிந்து வருவது நலம்."

—இவ்வாறு, தோழர் என். நல்லசேனாபதி, எம்.எல்.சி. அவர்கள், 26—1—55-ல், காங்கயம் ராவ்பகதூர் நல்லதம்பி சர்க்கரை மன்றாடியார் நினைவு உயர்தரப் பள்ளியின் 7-வது ஆண்டு விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

விழாவில் பல தோழர்கள் கலந்துகொண்டனர். ஊஞ்சலூரியிலுள்ள மாவட்டக் கழக நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் வி. ராஜகோபாலய்யர், ஆங்கிலத்தில் பேசும்போது குறிப்பிட்டதாவது:—

"மாணவர்களின் தாய்மொழி எம்மொழியாக இருந்தாலும், அவர்கள், ஆங்கில மொழி கற்பதை புறக்கணிக்கக்கூடாது. தற்போதுள்ள பல்வேறு தலைவர்கள், எழுத்தாளர்கள், சொற்பொழிவாற்றுபவர்கள் எல்லாரும் ஆங்கிலம் கற்றிருப்பதால்தான் பெரும் புகழை அடைந்திருக்கிறார்கள்" என்றார்.

## திருமணம்

28—1—55 காலை 10 மணிக்கு, பொத்தனூர் (சேலம்) தோழர் மருதன் — தோழியர் பாக்கியம் திருமணம், தோழர் எ. பழனி முத்து தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் வி. எஸ். சதாசிவம், வி. எ. இராமநாதன், கணபதி, முனுசாமி (மேகலை) ஆகியோர் சீர்திருத்தத் திருமணத்தின் அவசியம் பற்றிச் சொற்பொழிவாற்றினர்.

* * *

19—1—55 காலை 9 மணிக்கு உறையூர் தி. மு. கழகத் தோழர் ஏ. சின்னையன்—தோழியர் லட்சுமி திருமணம் தோழர் பி. எஸ். இராமமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ஆர். எஸ். நாராயணசாமி, ஆர். அழகிரி, எம். அய்யாச்சாமி, எம். ஆர். கணேசன், ப. அழகிரி, உளந்தை, அன்புமணி, சி. மாரியப்பன் ஆகியோர் மணமக்களை வாழ்த்தி சொற்பொழிவாற்றினர்.

## பிறப்பு

இலங்கை தி. மு. கழகத் துணைச் செயலாளர் தோழர் கே. எஸ். எம். கலாநேசன் அவர்களின் துணைவி ஜெமீலா அம்மையார் பேராவூரணியில், 21—1—55ல், ஒரு பெண் மகவுக்குத் தாயானார். தாயும் சேயும் நலம். இதன் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிப்பு அளிக்கப்பட்டது. வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

* * *

சேலம் 12-வது வட்ட தி. மு. கழகத் தோழர் அஜீம் துணைவியார் சலீமா அம்மையார் 17-1-55 திங்களன்று ஓர் ஆண் குழந்தைக்குத் தாயானார். தாயும் சேயும் நலம். அதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூபாய் 1. அன்பளிக்கப்பட்டது. வரப்பெற்றோம் — நன்றி—பொறுப்பாளர்.

## அனுதாபம்

7—1—55ல், பெங்களூர்—இலக்குமணபுரி தி. மு. கழகத் தோழர் சி. கிருட்டிணன் தந்தையார் இயற்கையெய்தியமைக்கு கழகச் சார்பில் அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

# நெடுஞ்செழியன் சொற்பொழிவு.....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கும், பகுத்தறிவு எனப்படுவதில் ஒரு சிறிய பாகம் இருக்கத்தான் செய்கிறதென்று நாம் கொள்வதில் தவறில்லை. இந்த முறையிலே தான் ஒவ்வொரு உயிரும், தன்னுடைய வழக்கப்படி தன்னுடைய 'வாழும் நெறி'யை அமைத்துக் கொள்கின்றது.

"ஆனால் மனிதனோ, அவற்றினின்றும் சிறிது மாறுபட்டவனாக, தனது 'வாழும் நெறி'க்கு ஏற்ப, இருக்கும் இடத்திற்கு ஏற்ப, தட்ப வெப்ப நிலைக்கு ஏற்ப, சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்ப தனக்கு வேண்டியதை உண்டாக்கி அதை ஒழுங்குபடுத்தி, வாழ்க்கையைச் செப்பனிடப் பயன்படுத்திக் கொள்ளும் ஆற்றல் பெற்றிருக்கிறான்.

"இதுதான் மனிதனுக்கும் மிருகத்திற்குமுள்ள வேற்றுமை. மனிதன், ஓடுகின்ற நீரை ஆற்றுப் படுகையாக்கி, அதன் குறுக்கே அணையைக் கட்டி நீரைத் தேக்கி, அதை வாய்க்கால்களாக வெட்டித் திருத்தி வயல் வளத்தை உண்டுபண்ணி, தனது வாழ்க்கைக்குரியனவற்றைச் செழிக்கச் செய்து தன்னுடைய 'வாழும் நெறி'யை அமைத்துக்கொள்ள தன்னையும் தனது சூழ்நிலைகளையும் கொண்டு ஒழுங்குபடுத்திக் கொள்ளுகிறான்.

"நினைத்தபடி மாற்றி, இயற்கையையும் செயற்கையையும்தனக்கு உபயோகப்படுத்தி, உல்லாசமாக ஒழுக்கத்துடன் வாழக்கூடிய பண்பு மனிதனிடம்தான் உண்டு."

"எனவேதான் நாம், மனிதனது உடலுழைப்பு குறைய வேண்டும்—இன்பம் பெருக வேண்டும் என்கிறோம்; அதற்காக. உழைக்கக் கூடாது என்று கூறவில்லை; எந்த ஒரு அளவில் ஒருவன் உழைக்கவேண்டுமோ அந்த அளவு வரை அவன் உழைக்கவேண்டும்; அதே நேரத்தில் அவன், அந்த உழைப்பினால் கிடைக்கும் இன்பத்தையும் அடைய வேண்டும்; உழைப்பிற்கேற்ற ஓய்வையும் அவன் பெற வேண்டும்; இதுதான் மனிதனது 'வாழும் நெறி'—இது தான் அவனது 'வாழும் நெறி' அமைந்திருக்க வேண்டிய முறை—இப்படி அமைந்திருந்தால்தான் வாழ்க்கையிலே நல்லதோர் பயனடைய அவனால் முடியும் என்று நாம் கூறுகிறோம்."

"உலகிலேயே பன்னெடுங் காலந்தொட்டு பண்பிலே, புகழிலே, தொன்மையிலே சிறந்து விளங்கியது நாம்தான்—நமது நாடு தான்; அமெரிக்காவும், ஆஸ்திரேலியாவும் தோன்றா முன்னரே, மிசிசிப்பி, வால்கா, சுமேரியன், நைல் நதி தீரங்களிலே நாகரீகம் தோன்றாத முன்னரே, சுமேரியாவைக் காணா முன்பே, சிவப்பு இந்தியரோ, எஸ்கிமோக்களோ, ஆப்பிரிக்கர்களோ, வடவர்களோ தோன்றிடு முன்னரே நாம் தோன்றி, மிகச் சிறந்த முறையில் வாழ்ந்திருக்கிறோம். 'வாழும் நெறி'யைக் கற்றுக்கொண்டிருந்து விட்டு, இடையிலே ஏற்பட்ட இடையூறுகளால் உதவாக்கரைகளாக உடைபட்டுக் கிடக்கிறோம்.

"என்—இதோ ஆராய்ச்சியாளர்களின் முடிவு கூறுகிறது—உலகம் முதன் முதல் தோன்றியதே லெமூரியா கண்டத்திலிருந்துதான் என்று! அது மட்டுமல்ல; சரித்திரம் சான்று பகருகிறது-கிரேக்க நாகரீகம் தோன்றா முன்னரே நாம் நாகரீகத்தில் ஊறிக்கிடந்தோம் என்று!

"அது மட்டுமென்ன? விஞ்ஞானத்தை வளர்த்ததுகூட நாம் தானே! மிருகங்களை வேட்டையாடி, அவற்றின் ஊனிடையே கண்ட கொழுப்பைக் கொண்டு விளக்கெரித்தோமே; —ஒளியைக் கண்ணுக்குப்படச் செய்தோமே: ஆனால், நமது விஞ்ஞானம் வளர்ந்து, விளக்கெண்ணெய் விளக்கோடு நின்றுவிட்டது—அவ்வளவுதான்!

"யாரும் வளராத காலத்திலே நாம் வளர்ந்திருந்தோம்; ஆனல், மாற்றார் வளர ஆரம்பித்ததும் நாம் வீழ்ச்சியுற்றோம்—அத்துடன் நமது விளக்கெண்ணெய் ஆராய்ச்சியும் முடிவு பெற்றுவிட்டது. இருந்த இடத்திலேயே இருந்து, ஒரு அடிகூட முன்வராமல் மிகத் தாழ்ந்து கிடக்கிறோம். மாற்றாரோ வளர்ந்தனர் — வளர்ந்துகொண்டு இருக்கின்றனர். இதற்குக் காரணம் என்ன? ஏன் இந்த நிலை அடைந்தோம்—என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

"பழமைப் பிடியிலே அகப்பட்டு, நாம், நமது 'வாழும் நெறி'யை முறைப்படுத்தாமல்—முறைப்படுத்தத் தெரியாமல் விட்டுவிட்டதைத் தவிர வேறு என்ன காரணம் இருக்க முடியும்?

"'பழமை' என்பதால் நாம் எதையும் எதிர்த்துவிடவில்லை; ஆனல், எது வேண்டுமோ—எது, நமது 'வாழும் நெறி'க்குப் பயன்படுமோ—எது மனித குலத்துக்கு நல்லது பயப்பதாக இருக்குமோ அதை நாம் பயன்படுத்தத்தான் வேண்டும்; 'பழமை' என்பதற்காக அதனை உதறித் தள்ளக் கூடாது.

"அப்படிப்பட்ட பழமைக் கோட்பாடுகளையும், பகுத்தறிவுக்குப் பொருந்தும் வகையில் உள்ள இக்கால கருத்துக்களையும் இணைத்து அவைகளைப் பயன்படுத்தி நாம், நமது 'வாழும் நெறி'யை உருவாக்க வேண்டும். அந்தந்தக் காலத்திற்கேற்ற முறையில் ஒத்துவருவதை வாழ்க்கையில் பொருத்தி, வாழ்க்கைப் பாதையையும் செப்பனிட்டு செயல் முறையில் நாம் இறங்கவேண்டும்.

"தேவையானவற்றை எடுத்துக் கொள்வோம்—தேவையல்லாதனவற்றை ஒதுக்கித் தள்ளுவோம்.

"நாம் சிந்தனை செய்யும் அறிவுடையராய்த் திகழ்ந்து நடந்ததையும் நிகழ்வதையும் மனதிலே எண்ணிப் பார்த்து—நாம் நடந்து செல்ல வேண்டிய பாதையை ஒழுங்குபடுத்தி, நமது 'வாழ்க்கை நெறி'யைப் பயனுள்ளதாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அத்தகைய 'வாழ்க்கை நெறி'யை அமைக்க—நல்வாழ்வு பெற 'குறள் நெறி'யைக் கையாளுவோம் என்று குறிப்பிட்டுக் கூறுகிறேன்."



காஞ்சியில் கலை விருந்து!

**5-2-55 இரவு 9-30 மணிக்கு காஞ்சீபுரம் கண்ணன் டாக்கீசில்**

புரட்சி நடிகர் M. G. ராமச்சந்திரன், M. G. சக்கரபாணி, நாராயண பிள்ளை, G. சகுந்தலா மற்றும் M. G. R. நாடக மன்றத்தார் நடிக்கும்

**இன்பக் கனவு**

நாடகம்

**சி. என். அண்ணாதுரை**

அவர்கள் தலைமையில் நடைபெறும்

கட்டணம்: ரூ. 3, 2, 1 (பெண்களுக்கு தனியிடம் உண்டு)

R. பாபு, பொறுப்பாளர்

## சுரங்க விபத்து

### பலர் உயிருடன் புதையுண்டனர்

பீகாரைச் சேர்ந்த ஜாரியாவுக்கு சுமார் 15 கல் தொலைவிலுள்ள தர்மாபாத் மாதிரி நிலக்கரிச் சுரங்கத்தின் ஒரு பகுதியும், அதனருகே உள்ள தொழிலாளர் வாழும் இடமும், திடீரென பூமிக்குள் புதைந்துவிட்டதாகவும், இந்தத் திடீர் விபத்தின் விளைவாக 10 பேர் பூமிக்குள்ளேயே உயிருடன் புதைக்கப்பட்டுவிட்டனர் என்றும், 8 பேர் பலத்த காயம் பட்டுள்ளனர் என்றும், இன்னும் அதிகம் பேர் மரணமுற்றிருக்கலாமோ என்ற ஐயப்பாடு அவர்களிடையே நிலவி வருவதாகவும் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

இந்த விபத்து நடைபெற்ற அன்று, தொழிலாளர்களுக்கு விடுமுறையாதலால், நல்லவேளையாக யாரும் வேலைக்குச் செல்லாமல் தங்கள் தங்கள் வீடுகளிலேயே தங்கியிருந்திருக்கின்றனர்.

மேற்படி சுரங்கச் சொந்தக்காரரான ஹரிலால் ஜோஷி என்பவரது வீடும் இடிந்துவிட்டதாகவும், அந்த நேரத்தில் அவர் அங்கில்லாமல் வெளியே எங்கேயோ சென்றிருந்ததாயும் சொல்லப்படுகிறது

பிரதம சுரங்க அதிகாரி உட்பட உயர்தர அதிகாரிகள் மேற்பார்வையில் மீட்சிப் படையினர், மிகக் கஷ்டத்துடன் 10 பேருடைய பிணங்களை பூமிக்குள்ளிருந்து வெளியே எடுத்திருக்கின்றனர். காயமடைந்தவர்களுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்த விபத்தில் சிக்கியவர்களில் 4 பெண்களும், 3 ஆண்களும், 3 குழந்தைகளும் மரணமுற்றனர் என்று தெரிகிறது.

இவ்விபத்தையொட்டி, 4 பீகா நிலமும் திடீரென்று சரிந்ததாம்; யாருமே எதிர்பார்த்திராத முறையில், இந்த நிலம் சரிந்து விழுந்ததாகவும், மேற்கொண்டு என்ன நடைபெறுகிறது என்பதைக்கூட புரிந்துகொள்ள முடியாதபடி இச்சம்பவம் நடைபெற்றதாகவும் அறிவிக்கப்படுகிறது.

## மதுரை நகர் தி.மு.கழக செயற்குழு உறுப்பினர்கட்கு

'மதுரை நகர் தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டம் 6-2-55 காலை 10 மணிக்கு, கழக அலுவலகத்தில் (4, சட்ருபாளையம்) நடைபெறும். செயற் குழு உறுப்பினர்கள் தவறாது வர வேண்டுகிறேன்" என தோழர் எஸ். முத்து அறிவிக்கிறார்.

### பொங்கல் விழா சிறப்புக் கூட்டம்

6—2—55 மாலை 5 மணிக்கு, காரைக்கால் மூன்றுக் கிணற்றுத் திடலில், காரைக்கால் தி. மு. கழகச் சார்பில் நடைபெறும் தோழர்கள் இல்லை வில்லாளன், த. அறிவழகன் ஆகியோர் பேசுவர்.

### நிலக்கோட்டை தி. மு. இளைஞர் கழக 5-வது ஆண்டு விழா

6—2—55 மாலை 6 மணிக்கு, நிலக்கோட்டை வ. உ. சி. திடலில் அலங்கரிக்கப்பட்டுள்ள அழகிரி அரங்கில், நிலக்கோட்டை தி மு இளைஞர் கழக 5-வது ஆண்டு விழா தோழர் மு. வசனப்பித்தன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், இ. காத்தான், மு. சையது இப்ராகிம், வே. ஜெயராஜ், வ. பாஸ்கரன் ஆகியோர் பேசுவர்.

### பொதுக்கூட்டம்

6—2—55 மாலை 6½ மணிக்கு, திருப்பூர் நொய்யல் நதியில், திருப்பூர் நகர திராவிட மாணவ முன்னேற்றக் கழகச் சார்பில் பொதுக் கூட்டம் நடைபெறும். தோழர் சி. பி. சிற்றரசு பேசுவார்.

### சொற் பயிற்சி மன்ற துவக்க விழா

6—2—55 காலை 10 மணிக்கு, வியாசர்பாடியில், திருவள்ளுவர் நூல் நிலையச் சார்பில், சொற்பயிற்சி மன்றம் துவக்க விழா தோழர் ந. இராமசாமி தலைமையில் நடைபெறும். தோழர்கள் வணங்காமுடி, த. சேதுராசன் ஆகியோர் பேசுவர்.

### சொற் பயிற்சிக் கூட்டங்கள்

5—2—55 மாலை 6½ மணிக்கு, சென்னை 1-வது வட்ட தி. மு கழகக் கட்டிடத்தில், தோழர் எஸ் ஆர். நாதன் தலைமையில் 'சமதர்மம்' எனும் பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

5—2—55 மாலை 6½ மணிக்கு; சென்னை 8-வது வட்டம் தி. மு. கழகத்தில் (எண் 1, குப்பையர் வீதியில்) தோழர் சி. ஆர். பாலசுந்தரம் தலைமையில் 'சமுதாயம்' எனும் பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

5—2—55 மாலை 6 மணிக்கு, சென்னை, இராயபுரம், எண் 59, மன்னார்சாமி தெருவிலுள்ள வட சென்னை குறள் நெறிக் கழக அறையில் தோழர் இரா. பாலு தலைமையில், 'நாடும்—நாமும்' என்பது பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

## சென்னை 8-வது வட்ட தி. மு. கழக நிர்வாக உறுப்பினர்கட்கு

6—2—55 காலை 8½ மணிக்கு, சென்னை, 1, குப்பையர் வீதி (மாடி)யில், சென்னை 8-வது வட்ட தி. மு. கழக நிர்வாக உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும். அது போது கழக வளர்ச்சி பற்றி ஆலோசிக்கப்படும்.

## சென்னை 18-வது வட்ட தி. மு. கழக செயற் குழு உறுப்பினர்கட்கு

6—2—55 காலை 9 மணிக்கு, சென்னை 18-வது வட்டம் தி மு. கழகப் பணிமனையில் செயற்குழுக் கூட்டம் நடைபெறும். அது போது ஆண்டு விழா கூட்ட பணியினைக் குறித்தும், கழக வரவு-செலவு கணக்குகளைக் குறித்தும், பொது உறுப்பினர்களைக் குறித்தும், மற்றும் ஆக்க வேலைகளைப் பற்றியும் முடிவெடுக்கப்படும்.

## நாமக்கல் வட்ட தி.மு.கழகச் செயலாளர்கட்கு

6—2—55 பகல் 2 மணிக்கு, நாமக்கல், சேலம் ரோடிலுள்ள தி. மு. கழகக் கட்டிடத்தில், தோழர் இரா. நெடுஞ்செழியன் முன்னிலையில் நாமக்கல் வட்ட தி. மு. கழகக் கமிட்டிக் கூட்டம் நடைபெறும்.

## பொன்மலை தி. மு. கழக உறுப்பினர்கட்கு

6—2—55 காலை 10 மணிக்கு, பொன்மலை — மேலக்கற்கண்டார் கோட்டை தி. மு. கழகக் கட்டிடத்தில், தி. மு. கழக உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும். அது போது ஆண்டு விழா நடத்துவது பற்றியும், கழக சம்மந்தமான இதர விஷயங்கள் பற்றியும் ஆலோசிக்கப்படும்.

### திருமணங்கள்

6—2—55 காலை 7 மணிக்கு, திருப்பரங்குன்றம் கூடக்கோவில் உறவின்முறை நாடார்கள் கட்டிடத்தில், தோழர் தங்கராசன்—தோழியர் மங்களேசுவரி திருமணம் தோழர் கே. எஸ் ராசமான் தலைமையில் நடைபெறும். தோழர்கள் எம். எஸ். இராமசாமி, எம். அய்யாச்சாமி ஆகியோர் பேசுவர். இதன் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி —பொறுப்பாளர்.

6—2—55 காலை 9½ மணிக்கு, ஆரணியில், தோழர் இரத்தினம்—தோழியர் இராணி; தோழர் கண்ணன்—தோழியர் சரோஜா; தோழர் மூர்த்தி—தோழியர் ருக்மணி ஆகியோர் திருமணங்கள் தோழர் வி. ஏ. நடராசன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் சி. வி. எம். அண்ணாமலை, கே. சுப்பிரமணியம், டி. கே. ராமலிங்கம் ஆகியோர் பேசுவர்.

# தென்னாட்டிலும் உருக்குத் தொழிற்சாலையாம்!

## உற்பத்தி மந்திரி மீண்டும் 'உரத்துக் கூவுகிறார்!'

புதுடில்லி, பிப். 3—தென்னிந்தியாவில் கிடைக்கப் பெறும் நிலக்கரியையும், பண்படாத இரும்பையும் பயன்படுத்தி ஆண்டு ஒன்றுக்கு ஒரு லட்சம் டன் உருக்கு இரும்பை உற்பத்தி செய்வதற்கான ஒரு உருக்குத் தொழிற்சாலையை, அங்கு ஏதாவது ஒரு இடத்தில் நிர்மாணிக்கப்படக் கூடும் என உற்பத்தி மந்திரி கே. சி. ரெட்டி கூறியுள்ளார்.

மத்திய பிரதேசத்தில் துவக்குவது என முடிவு செய்யப்பட்டுள்ள இந்தியா—ரஷ்ய உருக்குத் தொழிற்சாலை குறித்து விளக்கந்தரப்பட்டபோது, மேற்படி செய்தியை அவ்வமைச்சர் அறிவித்தார். இத்தொழிற்சாலை, இந்தியாவின் நான்காவது தொழிற்சாலையாகும்.

தென்னிந்தியாவில் எங்காவது ஒரு பகுதியில் உருக்குத் தொழிற்சாலை நிறுவுவது குறித்துத் தாம் 'பலமாக சிந்திக்கிறேன்' என்றும் அவர் நிருபர்களிடம் கூறியுள்ளார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம்.ஏ.